12 OCT 20
EASTERN UNIVERSITY

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MAMAGEMENT

## EXTERNAL DEGREE PROGRAMME

First Examination in Bachelor of Business Administration - 2010/2011/ Bachelor of Economics - 2011/2012 (September 2015) (Repeat)

EXB/EXE 1084 Financial Accounting

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக — நேரம்: 3 மணித்தியாலங்கள்

கணித்தற் பொறி அனுமதிக்கப்பட்டுள்ளது

---

01. திரு.கோணேஸ்வரன் என்னும் தனிவியாபாரியின் கணக்கேடுகளிலிருந்து 31.12.2014 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி பின்வருமாறு :

| விடயங்கள் | வரவு ரூபா. | செலவு ரூபா. |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் (கிரயத்தில்): காணி கட்டடம் | 700,000 | |
| தளபாடம் பொருத்திகள் | 200,000 | |
| மோட்டார் வாகனம் | 400,000 | |
| உபகரணம் | 100,000 | |
| 01.01.2014 இல் பெறுமானத்தேய்வு ஏற்பாடு: காணி கட்டடம் | | 50,000 |
| தளபாடம் பொருத்திகள் | | 50,000 |
| மோட்டார் வாகனம் | | 150,000 |
| உபகரணம் | | 20,000 |
| மூலதனம் | | 600,000 |
| எடுப்பனவுகள் | 70,000 | |
| 10% வங்கிக்கடன் | | 200,000 |
| காசும் வங்கியும் | 60,000 | |
| அறவிடமுடியாக் கடன் | 6,000 | |
| 01.01.2014 இல் ஐயக்கடனுக்கான ஏற்பாடு | | 10,000 |
| கடன்கொடுத்தோர் | | 77,000 |
| கடன்பட்டோர் | 120,000 | |
| 01.01.2014 இல் இருப்பு | 100,000 | |
| 10% முதலீடுகள் | 100,000 | |
| வங்கிக்கடன் வட்டி | 10,000 | |
| வுாடகை, வரி, காப்புறுதி | 30,000 | |
| வாடகை,வரி,காப்புறுதி சென்மதி 01.01.2014 இல் | | 5,000 |

| | | |
|---|---|---|
| மின்சாரம் | 35,000 | |
| மின்சாரம் சென்மதி 01.01.2014 இல் | | 3,000 |
| காகிதாதிகள் | 5,000 | |
| விற்பனையாளர் சம்பளம் | 60,000 | |
| அலுவலக சம்பளம் | 35,000 | |
| மோட்டார் வாகனப் பராமரிப்பு | 40,000 | |
| விற்பனைத் தரகு | 20,000 | |
| விளம்பரம் | 25,000 | |
| கழிவுகள் | 19,000 | 10,000 |
| வெளிச்சென்ற வண்டிக்கூலி | 25,000 | |
| உள்வந்த வண்டிக்கூலி | 15,000 | |
| திரும்பலகள் | 50,000 | 75,000 |
| கொள்வனவுகள் | 12,75,000 | |
| விற்பனைகள் | | 22,50,000 |
| | **35,00,000** | **35,00,000** |

**மேலதிகத் தகவல்கள்:**

1. 31.12.2014 இல் இருப்புக்கள் – ரூ.150,000
2. 31.12.2014 இல் சென்மதியாவுள்ள செலவுகள்: மின்சாரம்- ரூபா. 5,000, வாடகை, வரி - ரூ.8,000
3. முற்பணமாகச் செலுத்திய விளம்பரம் - ரூ.5,000
4. கடன்பட்டோரிலிருந்து ரூ.10,000 அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிப்பு செய்யப்படல் வேண்டும். மிகுதிக்கடன்பட்டோரில் 10% ஐயக்கடனுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.
5. நிலையான சொத்துக்கள் மீதி பின்வருமாறு பெறுமானத்தேய்வுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்:

| | |
|---|---|
| கட்டடம் (ரூ.400,000) | - ஆண்டுக்கு 5% கிரயத்தில் |
| தளபாடம் பொருத்திகள் | - ஆண்டுக்கு 10% கிரயத்தில் |
| மோட்டார் வாகனம் | - ஆண்டுக்கு 20% குறைந்து செல் மீதியில் |
| உபகரணம் | - ஆண்டுக்கு 10% குறைந்து செல் மீதியில் |

12 OCT 2015

**வேண்டப்படுவது :**

திரு. கோணேஸ்வரன் என்னும் தனிவியாபாரியின் 31.12.2014 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார, இலாப நட்டக்கணக்கையும் அத்திகதியில் உள்ளவாறான ஐந்தொகையையும் தயாரிக்குக.
(செய்கைகளைத் தெளிவாகக் காட்டுக.)

**(50 புள்ளிகள்)**

02. சரவணன் என்னும் தனிவியாபாரி தனது கணக்கேடுகளை முறையாகப் பேணுவதில்லை. ஆயினும் 31.12.2014 இல் முடிவுற்ற தனது நிதியாண்டுக்கு பின்வரும் தகவல்களை வழங்கக்கூடியவராக உள்ளார்.

**வங்கிக் கணக்கின் சுருக்கம்:**

| | ரூபா |
|---|---|
| கடன் கொடுத்தோருக்குச் செலுத்தியது | 650,000 |
| தளபாடம் வாங்கியது | 40,000 |
| சம்பளம் செலுத்தியது | 30,000 |
| வங்கியில் இட்டது | 840,000 |
| வாடகை செலுத்தியது | 60,000 |
| 15% முதலீடு செய்தது 01.07.2014 இல் | 100,000 |

**ஏனைய மீதிகள் :**

| | **01.01.2014** | **31.12.2014** |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கட்டடம் | 820,000 | 800,000 |
| தளபாடம் | 120,000 | 150,000 |
| இருப்புக்கள் | 45,000 | 50,000 |
| கடன்பட்டோர் | 150,000 | 170,000 |
| கடன்கொடுத்தோர் | 142,000 | 155,000 |
| முற்பண வாடகை | 10,000 | 15,000 |
| சம்பளம் சென்மதி | 5,000 | 8,000 |
| வங்கி மீதி | 50,000 | 10,000 |
| காசு மீதி | 10,000 | 20,000 |

ஏனைய தகவல்கள் :

i. சரவணன் ஆண்டுக் காலத்தில் மாதாந்தம் ரூ.2,000 காசினை தனது சொந்த பாவனைக்காக வியாபாரத்திலிருந்து பற்றியிருந்தார்.
ii. காசாகச் செலுத்திய மின்கட்டணம் ரூ.16,000
iii. ஆண்டுக் காலத்தில் நிலையான சொத்துக்கள் எதுவும் விற்பனை செய்யப்படவில்லை.

வேண்டப்படுவது :

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

i. காசேடு (இரட்டை நிரல்)
ii. 31.12.2014 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார, இலாப நட்டக் கணக்கு
iii. 31.12.2014 இல் உள்ளவாறான ஐந்தொகை
(செய்கைகளைத் தெளிவாகக் காட்டுக)

**(30 புள்ளிகள்)**

**03.** அன்வர் என்னும் வியாபாரியின் 31.12.2014 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி இணங்கவில்லை. வித்தியாசம் தொங்கல் கணக்கு ஒன்றில் வரவில் இடப்பட்டு பரீட்சை மீதி இணங்கச்செய்யப்பட்ட பின்னர் (இறுதிக்கணக்குகள் தயாரிக்கப்பட முன்னர்) ஏடுகளைப் பரிசோதித்த போது பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

(i) சம்பளம் செலுத்தியது ரூ.19,000 அக் கணக்கில் ரூ.11,800 ஆக பதியப்பட்டிருந்தது
(ii) கொள்வனவுத் திரும்பல் நாளேடு ரூ.2,000 ஆல் கூட்டிக் கூட்டப்பட்டிருந்தது
(iii) பெற்ற வாடகை ரூ.8,100 அக் கணக்கில் ரூ.10,080 ஆக பதியப்பட்டிருந்தது
(iv) கடன் விற்பனை ரூ.2,100 கடன்பட்டோர் கணக்கில் ரூ.210 ஆக செலவில் பதியப்பட்டிருந்தது.
(v) மீளப் பெறப்பட்ட அறவிடமுடியாக்கடன் ரூ.10,000 அக் கணக்கில் பதியப்படவில்லை

**வேண்டப்படுவது:**

(a) மேற்கூறிய வழுக்களைத் திருத்துவதற்கான (இறுதிக்கணக்குகள் தயாரிக்கப்பட முன்னர்) நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக.
(b) தொங்கல் கணக்கினை தயாரிக்குக.

(10 புள்ளிகள்)

04. நல்லதம்பி எனும் வியாபாரியின் காசேட்டின் வங்கி நிரல் 31.12.2014 இல் ரூ.20,200 வரவு மீதியைக் காட்டியது. ஆனால் அதே மாதத்திற்கான அவரது வங்கிக் கூற்று வேறு ஒரு மீதியைக் காட்டியது. காசேட்டையும் வங்கிக் கூற்றையும் ஒப்பிடும் பொழுது பின்வரும் வேறுபாடுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

(i) கடன்கொடுத்தோருக்கு வழங்கப்பட்ட காசோலை ரூ.22,500 அத் திகதி வரை வங்கியில் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூ.70,600 காசோலைகளில் ரூ.41,000 மாத்திரமே 31.12.2013 வரை வங்கியால் சேகரிக்கப்பட்டிருந்தது.

(iii) வங்கியால் பெறப்பட்ட பங்கிலாபம் ரூ.6,800 காசேட்டில் பதியப்படவில்லை.

(iv) வங்கியால் செலுத்தப்பட்ட மின்கட்டணம் ரூ.3,750 காசேட்டில் இடம்பெறவில்லை.

(v) காசேட்டின் செலவுப் பக்க கூட்டுத்தொகை ரூ.1,550 ஆல் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது

(vi) வங்கிக் கட்டணம் ரூ.2,250 காசேட்டில் பதியப்படவில்லை.

வேண்டப்படுவது:

(i) காசேட்டை திருத்துக.

(ii) திருத்திய காசேட்டின் படியான வங்கி மீதியை அடிப்படையாகக் கொண்டு 31.12.2014 இல் உள்ளவாறான வங்கிக்கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிக்குக.

(10 புள்ளிகள்)